செ.வெ.எண்.56 நாள்: 27.06.2020

தூத்துக்குடி மாவட்டம் சுனாமி காலனி, டூவிபுரம் 3வது தெரு ஆகிய நோய் கட்டுப்பாட்டு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா தடுப்பு பணிகளை தூத்துக்குடி மாவட்ட கொரோனா தடுப்பு கண்காணிப்பு அலுவலர் திரு.குமார் ஜெயந்த், இ.ஆ.ப., அவர்கள், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

---

தூத்துக்குடி மாவட்டம் சுனாமி காலனி, டூவிபுரம் 3வது தெரு ஆகிய நோய் கட்டுப்பாட்டு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா தடுப்பு பணிகளை தூத்துக்குடி மாவட்ட கொரோனா தடுப்பு கண்காணிப்பு அலுவலர் திரு.குமார் ஜெயந்த், இ.ஆ.ப., அவர்கள், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு இன்று (27.06.2020) ஆய்வு செய்தனர். மேலும் நோய் கட்டுபாட்டு பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு வீடு வீடாக சென்று தெர்மல் ஸ்கிரினிங் செய்யும் பணிகளையும், வீட்டில் உள்ள பொதுமக்களுக்கு சாணிடைசர் மூலம் கைகள் சுத்தம் செய்யும் பணிகளையும், பல்சஸ் சரிபார்க்கும் கருவி மூலம் பரிசோதனை செய்யும் பணிகளையும், நோய் கட்டுபாட்டு பகுதியில் உள்ள அனைத்து வீடுகளிலும் எந்த ஒரு நபரும் விடுபடாத வகையில் பரிசோதனைகளை மேற்கொள்ள பணியாளர்களுக்கு தூத்துக்குடி மாவட்ட கொரோனா தடுப்பு கண்காணிப்பு அலுவலர் திரு.குமார் ஜெயந்த், இ.ஆ.ப., அவர்கள் உத்தரவிட்டார். மேலும் டூவிபுரம் 3வது தெரு நோய் கட்டுப்பாட்டு பகுதியில் உள்ள பொதுமக்களின் வீடுகளில் ஸ்டிக்கர் ஒட்டப்பட்டு கிருமி நாசினி தெளிக்கும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனைத்தொடர்ந்து தூத்துக்குடி மாவட்ட கொரோனா தடுப்பு கண்காணிப்பு அலுவலர் திரு.குமார் ஜெயந்த், இ.ஆ.ப., அவர்கள், தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் கொரோனா புற நோயாளிகள் பிரிவு, ரூ.25 லட்சம் மதிப்பில் வைக்கப்பட்டுள்ள இக்லியா வேதியல் பொருள் கண்டறியும் கருவியின் செயல்பாட்டினை பார்வையிட்டார். தூத்துக்குடி அரசு பாலிடெக்னிக் கல்லூரியில் வெளி மாநில மற்றும் சென்னை மாவட்டத்திலிருந்து வருபவர்கள் தங்க வைக்கப்படும் பகுதிகளையும், அவர்களுக்கு செய்யப்பட்டுள்ள வசதிகள் குறித்தும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர் தூத்துக்குடி மாவட்ட கொரோனா தடுப்பு கண்காணிப்பு அலுவலர் திரு.குமார் ஜெயந்த், இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது:

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவுப்படி தூத்துக்குடி மாவட்ட கொரோனா தடுப்பு கண்காணிப்பு அலுவலராக நான் நியமிக்கப்பட்டுள்ளேன். தூத்துக்குடி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா தடுப்பு பணிகளை இன்று நேரில் சென்று ஆய்வு செய்யப்பட்டது. குறிப்பாக நோய் கட்டுபாட்டு பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு வீடு வீடாக சென்று தெர்மல் ஸ்கிரினிங் செய்யும் பணிகள், பல்சஸ் சரிபார்க்கும் கருவி மூலம் பரிசோதனை செய்யும் பணிகள் உள்ளிட்ட பணிகள் ஆய்வு செய்யப்பட்டது. மேலும் தூத்துக்குடி மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் பொதுமக்கள் காய்கறி வாங்குவதற்கு ஒரே இடத்தில் கூடுவதை தவிர்பதற்காக தற்காலிகமாக செயல்பட்டு கொண்டு இருக்கும் காய்கறி மார்கெட் பகுதியில் பொதுமக்கள் முககவசங்கள் அணிந்து, சமூக இடைவெளி பின்பற்றப்படுகிறதா என்பதை நேரில் ஆய்வு செய்யப்பட்டது. அதனைத்தொடர்ந்து தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் கொரோனா தொற்று மருத்துவ வார்டு பகுதிகளும் அங்கு நோயாளிகளுக்கு வழங்கும் சிகிச்சைகளும் ஆய்வு செய்யப்பட்டது.

தூத்துக்குடி மாவட்டத்தில் இதுவரை 24,554 மாதரிகள் பரிசோதனை செய்யப்பட்டது. இதில் 789 நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. 519 நபர்கள் பூரணம்

குணம் பெற்று வீடு திரும்பி உள்ளார்கள். 266 நபர்கள் கொரோனா தொற்று சிகிச்சை பெற்று வருகிறார்கள். 185 நபர்கள் குஜராத், மகாராஷ்டிரா, உத்தரபிரதேசம் போன்ற மாநிலத்தில் இருந்து தூத்துக்குடி மாவட்டத்திற்கு வருகை தந்தவர்கள். தூத்துக்குடி மாவட்டத்தில் அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் 1,600 படுக்கைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இதில் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் 600 படுக்கைகள் தயார் நிலையில் உள்ளது. இன்று தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் 234 நபர்கள் கொரோனா தொற்று நோயினால் சிகிச்சை பெற்று வருகிறார்கள். கொரோனா பாதிக்கப்பட்ட நபர்களின் முதன்மை மற்றும் இரண்டாம் நிலை தொடர்பாளர்களை கண்டறியப்பட்டு அவர்களுக்கும் பரிசோதனை செய்யப்பட்டு வருவதால் தூத்துக்குடி மாவட்டத்தில் சமூக பரவல் ஏற்படவில்லை. தமிழக அரசு தெரிவித்துள்ளபடி பொதுமக்கள் அத்தியாவசிய பணிகளுக்கு மட்டும் வீட்டில் இருந்து வெளி வர வேண்டும். வீட்டில் இருந்து அத்தியாவசிய பணிகளுக்கு வெளி வரும்போது கண்டிப்பாக முககவசங்களை அணிந்து, சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும். கொரோனா கட்டுப்படுத்திட அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என தெரிவித்தார்.

பின்னர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தூத்துக்குடி மாவட்ட கொரோனா தொற்று கண்காணிப்பு அலுவலர் திரு.குமார் ஜெயந்த், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்ற கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக்கூட்டத்தில் கொரோனா தொற்று உள்ள நபர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு தற்போதுள்ள படுக்கைகள், வார்டு வசதிகள், தனிமைபடுத்தப்பட்ட முகாம்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள் உள்ளிட்ட விவரங்களை கேட்டறிந்தார். மேலும் வெளி மாநிலம் மற்றும் சென்னை உள்ளிட்ட மாவட்டங்களில் இருந்து வருகை தரும் நபர்களை முறையாக பரிசோதனை செய்ய வேண்டும் எனவும், நோய் கட்டுபாட்டு பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு தன்னார்வலர்கள் மூலம் தடையின்றி அத்தியாவசிய பொருட்கள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும் எனவும், கொரோனா தொற்று குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட வேண்டும் எனவும், தாங்களது வீடு மற்றும் வீட்டு சுற்றுப்புறத்தினை தூய்மையாக வைத்துக்கொள்ள பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் எனவும், நோய் கட்டுபாட்டு பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு தினசரி மருத்துவ பரிசோதனை செய்ய வேண்டும் எனவும், இப்பகுதியில் தினசரி சுத்தம் செய்து கிருமி நாசினி தெளிக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும், தூத்துக்குடி மாவட்டத்தில் கொரோனா தொற்று இல்லாத நிலையை உருவாக்கிட அனைத்து அலுவலர்களும் முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என தெரிவித்தார்.

ஆய்வில் மற்றும் கூட்டத்தில் தூத்துக்குடி மாநகராட்சி ஆணையர் முனைவர். வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப, கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திரு.விஷ்ணுசந்திரன், இ.ஆ.ப., தூத்துக்குடி சார் ஆட்சியர் திரு.சிம்ரோன் ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., உதவி ஆட்சியர்(பயிற்சி) திரு.பிரித்திவிராஜ், இ.ஆ.ப., திருச்செந்தூர் கோட்டாட்சியர் செல்வி.தனபிரியா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திரு.உமாசங்கர், சுகாதார பணிகள் துணை இயக்குநர்கள் மரு.கிருஷ்ணலிலா(தூத்துக்குடி), மரு.அனிதா (கோவில்பட்டி), மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர் மரு.மாரியப்பன், நகராட்சி ஆணையர்கள் திரு.ராஜாராம் (கோவில்பட்டி), திருமதி.புஸ்பலதா(காயல்பட்டணம்), தூத்துக்குடி அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ரேவதி, உறைவிட மருத்துவர் மரு.சைலேஷ் ஜெபமணி, உதவி உறைவிட மருத்துவர் மரு.ஜெயபாண்டியன், மாநகராட்சி உதவி ஆணையர் திரு.சரவணன், மாநகராட்சி நகர்நல அலுவலர் மரு.அருண்குமார், உதவி பொறியாளர் திரு.ராமச்சந்திரன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் திரு.வெள்ளைசாமி, உதவி பொறியாளர் திரு.அன்புராஜ், மரு.இளங்கோ, மரு.ஜெயமுருகன் மற்றும் அலுவலர்கள், மருத்துவர்கள் உள்ளனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.